1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஊர்களைக் குறித்து வைத்திருக்கிறேன், நிச்சயமாக நடவடிக்கை எடுத்து பட்டா வழங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, ரூ. 100 இலட்சம் ஒதுக்கியதில், ரூ. 66 இலட்சம் செலவு செய்து, ரூ. 34 இலட்சத்தைத் திருப்பியனுப்பியிருக்கிறார்கள். சட்டசபையில் நிறைவேற்றப்படுவதும் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்படுவதும் சட்டசபையை ஒழுங்காக மதிக்கும் முறையாகுமா? அதுமட்டுமல்ல. குமரி மாவட்டத்தில் ரூ. 1,30,000 ஒதுக்கி, அந்த ரூ. 1,30,000-மும் ஒழுங்காக செலவழித்திருக்கிறார்கள். மிகவும் குறைந்த அளவு ஒதுக்கியதை மாற்றி, அதிக அளவு குமரி மாவட்டத்திற்கு ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்திற்கு வருகிற ஆண்டில் இன்னும் அதிகமாக ஒதுக்கப்படும்.

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்கள்

* 816வினு— திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர்களுக்கு கடந்த 15 வருடங்களாக ஊதிய உயர்வு மற்றும் அரசு ஊழியர்களுக்குள்ள எந்தவித சலுகையும் கொடுக்கப்படவில்லையெனவும், அரசு ஊழியர்கள் போல் சம்பளமும் இதர சலுகைகளும் தங்களுக்கும் தருமாறு அரசிடம் கோரியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மணிமுத்தாறு அணை பராமரிப்புக்காக 64 வெவ்வேறு தற்காலிக பதவிகளை ஏற்படுத்தி அரசு ஒப்பளிப்பு வழங்கியது. பின்னர் அந்தப் பதவிகள் நிரந்தரமாக்கப்பட்டன. இந்தப் பதவிகளுக்கு தற்காலிகமாக இருந்த நாள் வரை அட்ஹாக் விதிகளும் அவை நிரந்தரம் செய்யப்பட்ட நாளிலிருந்து சட்ட விதிகளும் தொகுக்கப்படவேண்டும். இது அரசின்

பரிசீலனையில் இருந்து வருகிறது. அட்ஹாக் விதிகள் தொகுத்தல் நிலுவையிலிருக்கையில், மூன்று ஆண்டு ஊதிய உயர்வுகள் மணிமுத்தாறு பராமரிப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மணிமுத்தாறு அணைத் திட்டத்தில் பணியாற்றுகிற அந்த ஊழியர்கள் குடியிருக்கும் வீடுகள் கூட இப்பொழுது சேதம் அடைந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக பணியிலிருக்கிற காரணத்தால் சர்வீஸ் கண்டிஷன்ஸ் தொடர்ச்சியாக இருக்குமா? அப்படிப்பட்ட ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே 1962-ல் தற்காலிக இடங்கள் 54 உருவாக்கப்பட்டன. அவைகள் 1971-ல் நிரந்தர இடங்களாக ஒதுக்கப்பட்டன. ஆனால் இன்று வரையில் அந்த இடங்களுக்கான விதிமுறைகள் வகுக்கப்படாதது உண்மையிலேயே சரியானது அல்ல. அந்தக் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு அரசு நிச்சயமாக ஏற்பாடு செய்யும். வீடுகளைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அதிலே என்ன பராமரிப்பு செய்ய வேண்டுமோ அதைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் பதில் அளித்திருக்கிறேன்,

சாத்தனூர் அணைப் பணியாளர்கள்

*817 வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணைப்பகுதியில் தொடர்ந்து சுமார் பத்து ஆண்டு காலமாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிமுறைகளை நிரந்தரப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: என். எம். ஆர். பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது பற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் பகுதியில் தினக் கூலிகளாக வேலை செய்யும் ஆட்கள் கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகளாக தினக்கூலிகளாக பணிபுரிகிறார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்க அரசிடம் ஏதாவது கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்,